100

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்வி முதுமாணி பட்டப்படிப்பு- 2023/2024

இறுதிப்பரீட்சை – 2024

STP9618- கல்வியின் முகாமைத்துவம்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 21.08.2024 **நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30**

ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. **i.** ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்றின் துணையுடன் முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கருவினை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. "முகாமைத்துவ செயன்முறைகளில் திட்டமிடலானது அடிப்படையானதும் முக்கியமானதுமான கட்டமாகும்". உங்களுடைய பாடசாலை அல்லது நிறுவனத்துடன் தொடர்புபட்ட உதாரணங்களின் துணையுடன் இதனை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

iii. உங்களுடைய பாடசாலை அல்லது நிறுவனத்துடன் தொடர்புபட்ட முகாமைத்துவப் பிரச்சினை **ஒன்றினை** (01) இனங்கண்டு அதனை தீர்ப்பதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்றினை தயாரிக்குக.

(13 புள்ளிகள்)

2. "எந்தவொரு ஒழுங்கமைப்பினதும் வெற்றி அல்லது தோல்வியைத் தீர்மானிப்பதில் தலைமைத்துவம் முக்கியமானதொரு காரணியாக கொள்ளப்படுகின்றது".

i. ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்றின் துணையுடன் தலைமைத்துவம் பற்றிய எண்ணக்கருவினை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. தலைமைத்துவக் கோட்பாடுகள் **மூன்றினைக்** (03) குறிப்பிட்டு அவற்றில் ஒரு கோட்பாட்டினை தெரிவு செய்து, அது எவ்வாறு நீங்கள் விளைதிறன்மிக்கதொரு தலைவராவதற்கு உதவும் என சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

iii. இருபதாம் நூற்றாண்டுக்குரிய கல்வித் தலைவர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய அத்தியாவசியமான திறன்கள் **ஐந்தினை** (05) பட்டியற்படுத்துக. அத்திறன்களை விருத்தி செய்து கொள்ளும் போது கல்வித் தலைவர் ஒருவர் இலங்கையின் கல்விச் சூழமைவில் முகங்கொடுக்கக் கூடிய **மூன்று** (03) சவால்களைச் சுருக்கமாக விளக்குக.

(13 புள்ளிகள்)

3. **i.** ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்றின் துணையுடன் ஒழுங்கமைப்புக் கலாசாரம் எனும் எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. ஒழுங்கமைப்புக் கலாசாரத்தின் **நான்கு** (04) பண்புகளை பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. ஒழுங்கமைப்பொன்றின் கலாசாரத்தினை பலமூட்டுவதற்கு மேற்கொள்ளக் கூடிய உபாயங்கள் **இரண்டினை** (02) உதாரணமொன்றின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iv. " Edgar Schein என்பவருடைய மாதிரிச் சட்டகம் ஒழுங்கமைப்புக் கலாசாரம் பற்றி விளங்கிக் கொள்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பயன்படும்". இதனை சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

4. "வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட காலப்பகுதியினுள் குறித்தவொரு நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான முயற்சியே செயற்றிட்டம் என எளிமையாக வரைவிலக்கணம் செய்யலாம்".

i. செயற்றிட்ட முகாமைத்துவம் என்பதனால் நீங்கள் கருதுவது யாது?

(08 புள்ளிகள்)

ii. எந்தவொரு செயற்றிட்டத்தினையும் வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்வதற்கு உதவும் **மூன்று** (03) பரிமாணங்களைச் சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

iii. செயற்றிட்டம் ஒன்றின் பங்கெடுப்பாளர்கள் என்பதனால் கருதப்படுவது யாது? என, சுருக்கமாக விளக்குவதோடு நாங்கள் ஏன் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் பங்கெடுப்பாளர்களின் எதிர்பார்ப்புக்களை கவனத்திற் கொள்ள வேண்டும் என குறிப்பிடுக.

(13 புள்ளிகள்)

5. "இலங்கை கல்வி முறைமையின் சகல மட்டங்களிலும் கல்வி முகாமைத்துவ மற்றும் நிருவாகப் பிரச்சினைகள் இடம் பெறுகின்றன".

i. இலங்கையின் கல்வி முறைமையில் நிலவும் கல்வி முகாமைத்துவ மற்றும் நிருவாகப் பிரச்சினைகள் **நான்கினை** (04) குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii. இலங்கையின் கல்வி முறைமையில் நிலவும் கல்வி முகாமைத்துவ மற்றும் நிருவாகப் பிரச்சினைகளுக்குப் பங்களிப்புச் செய்யும் **மூன்று** (03) காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

iii. இலங்கையின் கல்வி முறைமையில் நிலவும் கல்வி முகாமைத்துவ மற்றும் நிருவாகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு எடுக்கக் கூடிய **மூன்று** (03) படிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(13 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -